# <u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண்.295/2018, வா.சா.2. ராமசாமி, த/பெ. நஞ்சப்ப செட்டியார்

2026 ம் ஆண்டு  ஏப்ரல் மாதம் 15 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய, வா.சா.2 ஆன  என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி  அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | ராமசாமி, | தொழில் | – | |
| த/பெ  க/பெ | – | நஞ்சப்ப செட்டியார் | ஜாதி | – | |
| கிராமம் | – | செட்டிபாளையம் | வயது | – | 68 |
| மாவட்டம் | – | கோவை மாவட்டம் | தேதி | – | 15.04.2026 |

முதல் விசாரணை

நான் செட்டிபாளையம் கிராமத்தில்  குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ.8** | வா சா 2 எனது ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) சாட்சியம் அளிக்க யார் என்னை அழைத்து வந்தது என்றால் வாதி செல்வி அழைத்து வந்தார்.  நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் நான் தான் சொன்னேன். எனது வீட்டில் தான் வாதி செல்விக்கு திருமணம் நடந்தது.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிபதி.
பொள்ளாச்சி.

சந்திரசேகரின் தாய் தந்தை பெயர் என்ன என்றால் தெரியாது. அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் இல்லை அவர்கள் எப்போது இறந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சந்திரசேகரின் தாய் தந்தை பெயர் அவர்கள் இறந்த விவரம் குறிப்பிட்ட சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான் அவர்கள் பெற்றோர் பெயர் எனக்கு தெரியாது. சந்திரசேகருக்கும் செல்விக்கும் எப்போது திருமணம் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது. சாந்தி என்பது யார் என்றால் எனது அண்ணன் மகள் ஆவார். சந்திரசேகர் சாந்தியை திருமணம் செய்து கொண்டாரா என்றால் இல்லை. செல்வியை தான் திருமணம் செய்து கொண்டார். எனக்கு வாதியின் குடும்ப விவரங்கள் எதுவும் தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.